செ.வெ.எண்: 309 நாள்:14.05.2018

**பத்திரிக்கை செய்தி**

திருநெல்வேலி மாவட்டத்தில் 1427 பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் 18.05.2018-ம் தேதி முதல் 15 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடைபெற உள்ளது. திருநெல்வேலி மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு நிகழ்ச்சி நிரலில் உள்ளவாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நான்குனேரி வட்டத்திலும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பாளையங்கோட்டை வட்டத்திலும் வருவாய்த் தீர்வாயம் நடத்த உள்ளார்கள். மீதமுள்ள அனைத்து வட்டங்களில் கீழ்க்கண்டவாறு வருவாய்த் தீர்வாய அலுவலர்களால் நடத்தப்பட உள்ளது.

| | **வட்டத்தின் பெயர்** | **துவங்கும் நாள்** | **வருவாய் தீர்வாய அலுவலர்** |
|---|---|---|---|
| 1. | நான்குனேரி | 18.05.2018 | மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி |
| 2. | பாளையங்கோட்டை | 18.05.2018 | மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி |
| 3. | இராதாபுரம் | 18.05.2018 | சார் ஆட்சியர், சேரன்மகாதேவி |
| 4. | சங்கரன்கோவில் | 18.05.2018 | கோட்டாட்சித் தலைவர், திருநெல்வேலி. |
| 5. | ஆலங்குளம் | 18.05.2018 | கோட்டாட்சித் தலைவர், தென்காசி. |
| 6. | சேரன்மகாதேவி | 18.05.2018 | கூடுதல் நேர்முக உதவியாளர் (பொது) |
| 7. | திருநெல்வேலி | 18.05.2018 | கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) |
| 8. | தென்காசி | 18.05.2018 | மாவட்ட வழங்கல் அலுவலர் |
| 9. | வீரகேரளம்புதூர் | 18.05.2018 | தனித்துணை ஆட்சியர் (நதி நீர் இணைப்பு) |
| 10. | செங்கோட்டை | 18.05.2018 | தனித்துணை ஆட்சியர் (முத்திரை) |
| 11. | திருவேங்கடம் | 18.05.2018 | ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி |
| 12. | கடையநல்லூர் | 18.05.2018 | மாவட்ட மேலாளர் (தாட்கோ) |
| 13. | சிவகிரி | 18.05.2018 | வடிசால் அலுவலர், தரணிசுகர்ஸ்(ம) கெமிக்கல்ஸ் (பி)லிட், வாசுதேவநல்லூர். |
| 14. | அம்பாசமுத்திரம் | 18.05.2018 | உதவி ஆணையர் (கலால்), திருநெல்வேலி |
| 15. | மானூர் | 18.05.2018 | உதவி ஆணையர், பாளையங்கோட்டை மண்டலம் மாநகராட்சி, திருநெல்வேலி |

மேற்கண்டவாறு 1427-ம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் ஒவ்வொரு வட்டத்திலும் தங்களது கிராமத்திற்காக நடைபெறும் நாட்களில் அந்தந்த வருவாய் கிராமத்தின் பொது மக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.